பக்கங்கள் 13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 21 திங்கட்கிழமை 03.02.2025 | அதிர்வு 185

## வீடு ஒன்றுக்குள் வைத்து மூவர் வெட்டிப் படுகொலை

### அம்பலாந்தோட்டையில் பயங்கரம்

வீடு ஒன்றுக்குள் வைத்து மூவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

02 ▶



# சேனாதிராஜாவின் மறைவு ஈழத் தமிழருக்குப் பேரிழப்பு

### இரங்கல் செய்தியில் பாரதிய ஜனதா கட்சி தெரிவிப்பு

மூத்த அரசியல் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு, இலங்கைத் தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கு.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

02 ▶



# திஸ்ஸ விகாரை காணியின் உரிமையாளர்கள் வடக்கு ஆளுநரிடம் மாற்றுக் காணி கேட்டார்கள்

### ஆளுநரின் ஊடகப் பிரிவு விளக்கம்

யாழ். தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியின் உரிமையாளர்கள் விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியை மாற்றீடாகத் தமக்கு வழங்க வேண்டும் என ஆளுநர் நா.வேதநாயகனிடம் கோரியிருந்தனர் என்று வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தையிட்டியில் தற்போது திஸ்ஸ விகாரை அமைந்துள்ள

02 ▶







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி கட்சிக்குள் இருக்கும் சிலரும் கட்சியிலிருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்ட சிலரும் சேர்ந்து முன்னெடுத்த அரசியல் அடாவடித் திருவிழாவும் நேற்று அமரரின் இறுதி கிரியைகள் பூர்த்தியானமையை அடுத்து முடிவுக்கு வந்திருக்கின்றது.

நேற்று முன்தினம் இரவு மாவையின் இறப்பு வீட்டுக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சேயோன், கட்சியின் இணைப் பொருளாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான கமலேஸ்வரன், திருகோணமலை முன்னாள் நகர சபை தலைவர் சுப்ரா உட்பட பலர் மேற்படி அட்டகாச குழுவினரின் ஏற்பாட்டில் நடந்த அடாவடியில் அச்சுறுத்தப்பட்டு அவலத்தை எதிர்கொண்டனர்.

நேற்று அமரர் மாவை சேனாதிராஜாவின் இறுதிக்கிரியைகள் தடையின்றி நடந்தனவாயினும், அந்த நிகழ்வில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், செயலாளர் சத்தியலிங்கம் எம்.பி., துணைச் செயலாளரும் பேச்சாளருமான சுமந்திரன், மத்திய குழு உறுப்பினர்களான சயந்தன், ரவிகரன் எம்.பி., சாணக்கியன் எம்.பி., கட்சியின் முன்னாள் செயலாளர் துரைராஜசிங்கம் உட்பட பலர் பிரசன்னமாகி இருக்கவில்லை.

மேற்படி அட்டகாசக் குழுவின் சண்டப் பிரசண்டத்துக்கு மத்தியில் ஏன் அமரரின் இறப்பு வீட்டை களேபரமாக்குவான் என்று கருதி அவர்கள் இறுதி நிகழ்வில் பங்குபற்றுகின்றமையைத் தவிர்த்துக் கொண்டனர் என்று தெரிகின்றது.

02 ▶

# கயிறு கட்டிய நிலையில் குளத்தில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது!

## வடமராட்சி கிழக்கில் பரபரப்பு

உடலில் கயிறு கட்டிய நிலையில் குளத்தில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

யாழ். வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று தெற்கு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டது. 70 வயது மதிக்கத்தக்க வயோதிபரின் சடலமே மீட்கப்பட்டது.

புற்றுநோயால் அவதிப்பட்ட மேற்படி வயோதிபர் வேதனை தாங்க முடியாமல் உயிரை மாய்த்துக் கொண்டார் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

இறப்பு வீட்டை வைத்து நடத்திய சிறப்பு அரசியல் முடிவுக்கு வந்திருக்கிறது.

இனிக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவ்விடயங்கள் பிய்த்து உதறப்படலாம் எனக் கருதப்படுகிறது.

இறப்பு வீட்டை வைத்து நடத்திய சின்னத்தன அரசியல், வரப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு பெரும் பாதிப்பை - பின்னடைவை - தரக்கூடிய சாத்தியங்கள் இப்போதே தென்படுகின்றன.

இரண்டு கைகள் வீசினால்தான் சத்தம் வரும். ஒரு கை வீசிச் சத்தம் வராது. இதனை உணர்ந்து கொண்ட ஒரு தரப்பு அமரரின் இறப்பு வீட்டை சிறப்பாக நடப்பதற்காக விலகிக் கொண்டது என்றே தோன்றுகின்றது. நன்மைக்காக பின்வாங்கிய செயல் பாராட்டுக்குரியது தான்.

* * *

வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் பிரதேசத்தில் யாழ் மாநகர சபை முக்கிய இடத்தை - கவனிப்பை - பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆளும் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் மாநகர சபையையும் இலக்கு வைத்து காய் நகர்த்துகின்றது. 2023 முற்பகுதியில் இதே தேர்தலுக்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த நாவலர் வீதியின் வர்த்தகப் பிரமுகர் இந்த தடவை தமது சுயேச்சைக் குழுவை 'தியாகம்' செய்துவிட்டு, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் மேயர் வேட்பாளராகக் களமிறங்கக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன. அமைச்சர் ஒருவர் தம்மை அணுகி இதுகுறித்து பேசினார் என அந்த வர்த்தகப் பிரமுகர் தம்முடன் உரையாடிய ஒருவருக்குத் தகவல் தெரிவித்து இருக்கின்றார் என்று அறிய வந்தது.

தமிழரசு, தமிழ் தேசிய ஜனநாயகக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.பி.டி. என்று பல அணிகள் மும்முரமாகக் களமிறங்கத் தயாராகி வருகின்றன.

'சபாஷ் சரியான போட்டி!' என்று கூறத்தக்க அளவுக்கு களம் சூடாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### வீடு ஒன்றுக்குள்...

இந்தக் கொடூர சம்பவம் அம்பலாந்தோட்டை, மாமடல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

6 பேர் கொண்ட குழு வீடு ஒன்றுக்குள் நுழைந்து அங்கிருந்த மூன்று பேரை வெட்டிப் படுகொலை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் 29, 34 மற்றும் 45 வயதுடையவர்களாவர்.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரிடையே நீண்ட காலமாக நிலவி வந்த தகராறின் விளைவாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

### திஸ்ஸ விகாரை...

காணியின் உரிமையாளர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், காணியின் உரிமையாளர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது விகாரை தற்போது அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்று அவர்கள் தெரிவித்தனர். அது தொடர்பான ஆவணங்களையும் அவர்கள் இதன்போது சமர்ப்பித்திருந்தனர்.

திஸ்ஸ விகாரைக்குரிய காணி பிறிதொரு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் ஆளுநருக்கு அவர்கள் தெரியப்படுத்தினர்.

விகாரை தற்போது அமைந்துள்ள காணிக்கு மேலதிகமாகவும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த காணி உரிமையாளர்கள் அந்தக் காணியை விடுவித்துத் தருவதுடன், விகாரைக்குச் சொந்தமான அயலிலுள்ள காணியையும் மாற்றீடாக தமக்கு வழங்க வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

காணி உரிமையாளர்களது கோரிக்கைக்கு அமைவாக இது தொடர்பில் விகாராதிபதியுடனும், நயினாதீவு விகாரையின் விகாராதிபதியுடனும் ஆளுநர் பேச்சு நடத்தி வருகின்றார். அத்துடன் இந்த இணக்கப்பாடு யோசனை தொடர்பில் புத்தசாசன அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு செல்வதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்." - என்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திஸ்ஸ விகாரையை அகற்றி அந்தக் காணியை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்தபோது, வடக்கு மாகாண ஆளுநர் குறித்த காணி உரிமையாளர்கள் மாற்றுக் காணியைக் கேட்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் விமர்சனத்துக்கு உள்ளான நிலையில், அதனைத் தெளிவுபடுத்தும் முகமாக வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு குறித்த செய்திக் குறிப்பை நேற்று வெளியிட்டுள்ளது.

### சேனாதிராஜாவின்...

"இலங்கைத் தமிழர்களின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜாவின் இறப்புச் செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றது.

இவர் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கைத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். தமிழக மக்கள் மீது பெரும் அன்பு கொண்டவர்.

இலங்கைத் தமிழ் மக்கள் நல்வாழ்வுக்காக, நமது மத்திய அரசு மேற்கொண்ட நலத்திட்டங்கள் தொடர்பாக, வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

ஐயா மாவை சேனாதிராஜாவின் மறைவு, இலங்கைத் தமிழ் மக்களுக்கும், தனிப்பட்ட முறையில், எனக்கும் பேரிழப்பு. அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கின்றேன். ஓம் சாந்தி!" - என்றுள்ளது.

இதேவேளை, இலங்கைத் தமிழ் அரசியல் வரலாற்றில் தனக்கென தனி அடையாளம் பதித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான காலஞ்சென்ற மாவை சேனாதிராஜாவின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றன.

அன்னாரின் புகழுடல் வைக்கப்பட்டிருந்த யாழ். மாவிட்டபுரத்திலுள்ள இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நேற்று முற்பகல் நடைபெற்றன.

அன்னாரின் புகழுடலுக்கு அரசியல்வாதிகள், கல்விமான்கள், பொது மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னார் தமிழ்த் தேசியத்துக்கு ஆற்றிய பங்களிப்புகள் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் இரங்கல் உரை நிகழ்த்தினர்.

கிரியைகள் நிறைவுற்றதையடுத்து புகழுடல் அன்னாரின் இல்லத்தில் இருந்து மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானம் வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

அன்னாரின் புகழுடல் பலரது கண்ணீருக்கும் மத்தியில் தீயில் சங்கமமானது.

உடல் நலக்குறைவால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தனது 82 ஆவது வயதில் மாவை சேனாதிராஜா கடந்த 29 ஆம் திகதி காலமானார்.



# ஆசிரியை ஒருவர் அடித்துக் கொலை! அவரின் தாயாரும் சகோதரரும் கைது

கம்புருபிட்டிய பிரதேசத்தில் இளம் ஆசிரியை ஒருவரைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் உயிரிழந்த பெண்ணின் தாயும் சகோதரனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கத்தி மற்றும் இரும்புப் பூந்தொட்டியால் சரமாரியாகத் தாக்கி ஆசிரியை கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையுண்ட பெண்ணின் தாயாரால் பொலிஸாருக்கு எழுதப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கடிதம் ஒன்றும் வீட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் அவரது மகளை அவரே கொன்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பல வருடங்களாக மகள் சொத்துக் கேட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குடும்பத் தகராறு காரணமாக இந்தக் குற்றம் இடம்பெற்றிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கடந்த 31 ஆம் திகதி 33 வயதுடைய ஆசிரியர் ஒருவர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

அவர் தனது தாய் மற்றும் மூத்த சகோதரருடன் வீட்டில் தங்கியிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், பொலிஸார் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது சந்தேகத்தின் பேரில் தாயார் நாற்காலியில் மயங்கிக் கிடந்துள்ளார்.

மகளைக் கொலை செய்து விட்டு 76 வயதுடைய தாய், மருந்து வகைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.



# கைதிகளை திறந்த வெளியில் சந்திப்பதற்கு அனுமதி

எதிர்வரும் 4 ஆம் திகதியன்று சிறைக் கைதிகளை திறந்த வெளியில் சந்திப்பதற்கு, அவர்களின் உறவினர்களுக்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்படள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த விசேட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பீ. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, மேற்படி தினத்தில் கைதிகளின் உறவினர்களால் கொண்டு வரப்படும் உணவு மற்றும் சுகாதாரப் பொருள்களை கைதியொருவருக்கு போதுமான அளவு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளிலும் சுகாதார வழிகாட்டுதலுக்கு அமைய, கைதிகளை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரச கூட்டுக்குள் குழப்பம்?

இலங்கையில் இப்போது ஆட்சியமைத்திருக்கும் ‘தேசிய மக்கள் சக்தி’ ஒரு தனிக் கட்சி அல்ல. அது இலங்கையின் ஓர் இடதுசாரி அரசியல் கூட்டணி . 2019 ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தலைவர் அநுர குமார திஸநாயக்கவால் தொடங்கப்பட்ட ஓர் கூட்டு. இக்கூட்டணியில் அரசியல் கட்சிகளும் ஏனைய அமைப்புகளுமாக 28 தரப்புகள் உள்ளன.

அதில் பிரதான பங்காளித் தரப்பு மக்கள் விடுதலை முன்னணியான ஜே.வி.பி. ஆகும்.

புதிய ஆட்சி அமைக்கப்பட்டு அதிகாரம் கைக்கு வந்ததும் கூட்டுக்குள் குழப்பம் தொடங்கி விட்டதாக செய்திகள் கசிந்து வருகின்றன.

அமைச்சர்கள் மட்டத்தில் மட்டுமல்லாமல் அதற்கு அடுத்த தரப்பில் அரசியல் நியமனங்களைப் பெறுவோர் இடையே இத்தகைய குழப்பங்கள் முதல் கட்டமாக வெளிப்படுகின்றன என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

புதிய அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் நியமிக்கப்பட்ட அரச நிறுவனங்களின் தலைவர்கள் பலர் அடுத்தடுத்து ராஜினாமா செய்வது பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கூட்டுக்குள் நிலவும் குழப்பமே இதற்குப் பிரதான காரணம் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

தேசிய மக்கள் சக்தி கூட்டணியில் வலிமை பொருந்திய ஜே.வி.பியினரின் மேலாதிக்கம் காரணமாக இந்த முரண்பாடுகள் வெடிக்கின்றன என்றும் அவற்றின் விளைவே இந்த ராஜினாமாக்கள் என்றும் கூறப்பட்டது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியிலிருந்து செனேஷ் பண்டார முதலில் ராஜினாமாச் செய்தார். ஜனவரி மாதம், இலங்கைப் போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சிந்தக தர்ஷன ஹேவாபத்திரன, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் என்.பி.எம். ரணதுங்க, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ருவான் விஜேமுனி மற்றும் அணுசக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர்.டி. ரோசா ஆகியோர் பதவி விலகினர்.

பெரும்பாலானவர்கள் ராஜினாமாக்கள் ‘தனிப்பட்ட காரணங்களுக்காக’ என்ற இராஜதந்திர சொல்லாடல் நிலைப்பாட்டைப் பேணினாலும், இந்த விவகாரங்களில் கண்ணுக்கு வெளிப்படையாகத் தெரிவதை விட அதிகமான - ஆழமான - அம்சங்கள் இருக்கின்றன என்ற தகவல்கள் உள்ளன.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவி மற்றும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆகிய வலிமைகளை வைத்துக்கொண்டு, கூட்டணிக்குள் உள்ள குழப்பங்களை மூடி மறைத்து, விவகாரங்களை இப்போதைக்கு சுமுகமாக கையாண்டு கொண்டு செல்ல முடியும் என்றாலும், இந்த வெளிப்பூச்சு ஐக்கியம் நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடித்து நீடிப்பதற்கான சாத்தியங்கள் குறைவு என தெற்கு அரசியல் நோக்கர்கள் கருதுகின்றார்கள்.

கூட்டுக்குள் உள்ள குழப்பத்தின் விளைவு விரைவில் நடைபெற இருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தெற்கில் தெளிவாக எதிரொலிக்கும் என சில தரப்புகள் ஆருடம் கூறுகின்றன.

தேசிய மக்கள் சக்தி தனக்கு நீண்ட போராட்டத்தின் பின் கிடைத்திருக்கும் இந்த மக்கள் ஆணையை - அதிகாரத்தை - நாட்டை ஆளும் வரலாற்று வாய்ப்பை - சரியாகப் பயன்படுத்தி, ஆட்சியை நேர்சீராக முன்னெடுக்காவிட்டால், மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அதற்குக் கிட்டுவது சாத்தியமற்றுப் போய்விடும்.

மக்கள் தந்த ஆணையை சரியாக பயன்படுத்தி, அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவு செய்ய அக்கூட்டணி காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதே அதன் தற்போதைய கடப்பாடாகும்.






# முல்லைத்தீவில் இரத்ததானம் வழங்கினர் பொலிஸ், விசேஷட அதிரடிப்படையினர்

(பா.சதீசன்)

பொலிஸார், விசேஷட அதிரடிப்படையினர், பொதுமக்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நேற்று இரத்ததானம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் இரத்த தட்டுப்பாடுகள் நிலவிவரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸார், விஷேட அதிரடிப்படையினர், பொதுமக்கள் இணைந்து நேற்று முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் வழங்கியிருந்தார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இரத்த பற்றாக்குறை காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 10 பொலிஸ் நிலையங்களில் இருந்து பொலிஸாரும் , விஷேட அதிரடி படையினர், மற்றும் பொதுமக்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் சசினி விஜயரத்ன தலைமையில் இரத்தத்தை அவசர தேவையின் நிமிர்த்தம் வழங்கியிருந்தனர்.

முல்லைத்தீவு கிளை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த இரத்ததானம் வழங்கும் நிகழ்விற்கு தேவையான சிற்றுண்டிகளை முல்லைத்தீவு மாவட்ட வனவள திணைக்களத்தினர் வழங்கி இருந்தனர்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் இரத்த தட்டுப்பாடு தொடர்ச்சியாக இருப்பதாகவும் இதனை நிவர்த்தி செய்ய அனைவரும் ஆதரவு தருமாறு இரத்த வங்கியின் வைத்தியர் தெரிவித்துள்ளார்.











# வவுனியாப் பொலிஸாரின் திடீர் சுற்றி வளைப்பில் போதைப்பொருள் விற்பனை செய்த ஒருவர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா பொலிஸாரின் திடீர் சுற்றி வளைப்பில் வைரவபுளியங்குளம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து போதைப் பொருள் விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் மாணவர்களுக்குப் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையில் விசேட பொலிஸ் குழு வவுனியா, வைரவபுளியங்குளம், ரயில்வே வீதி ஒன்றில் தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த சிறிய வெற்றிலை கடை ஒன்றைச் சுற்றி வளைத்துத் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது அந்த வர்த்தக நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக இருந்த 140 கிராம் மாபா, ஒரு கிலோ மாபா கலந்த பாக்கு உள்ளிட்ட போதைப் பொருள் பொலிஸரால் மீட்கப்பட்டது. இதனையடுத்து அந்த வர்த்தக நிலையத்தை நடத்தியர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்சொ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மாவை சேனாதிராஜா ஒரு நல்ல நண்பர் இரங்கல் செய்தியில் விக்கி உருக்கம்!

மாவை சேனாதிராஜா ஒரு நல்ல நண்பர் என்று அவரின் மறைவை யொட்டி தாம் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், மூன்னாள் வட மாகாண முதலமைச்சரும், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித் திருக்கின்றார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

நான் முதன் முதலில் மாவையுடன் அறிமுகமானது 1979 ஆம் ஆண்டில். நான் அப்போது மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி சக மட்டக்களப்பு நீதவானாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். என் நண்பர் சட்டத்தரணி மு.சிவசிதம் பரம் ஒரு வழக்கில் ஆஜரானார்.

'சேர்! இவர் மாவை சேனாதிராஜர். அவர் காசி ஆனந்தன்' சந்தேக நபர்கள் மற்றவர்களையும் மன்றுக்கு அறி முகப்படுத்தினார்.

'இவர்களை ஆதாரமில்லாக் குற்றச் சாட்டுக்களின் பேரில் ஒரு வருட காலத் திற்கு மேலாக சிறையில் அடைத்து வைத்துள்ளது அரசு' என்றார்.

'முக்கிய ஆவணங்கள் சில பெறப்பட வேண்டியதால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யத் தாமதமாகியுள்ளது' என்றார் அரச சட்டத்தரணி.

பதியப்பட்ட ஆவணங்களை வாசித் துப் பார்த்தேன். 'நீதிமன்றில் ஆஜராக் கப்பட்ட முதல் தினத்தில் இவர்கள் தங்கள் குற்றத்தை ஏற்றிருந்தால் இன்னும் சில மாதங்களில் இவர்கள் சிறையில் இருந்து விடுதலை அடைந்து வெளிவர வேண்டுமே! நீங்கள் குறிப் பிடும் குற்றச்சாட்டுக்கு ஆகக் கூடிய தண்டனை இரண்டு வருட கால சிறைத் தண்டனை. இன்னமும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லையே. ஏன்?' என்றேன்.

'இவர்கள் மிகவும் மோசமானவர்கள். புலிகளுடன் தொடர்புடையவர்கள்' என்று அரச சட்டத்தரணி கூறினார்.

'நீங்கள் அவர்கள் பற்றி செய்யும் விமர்சனம் இருக்கட்டும். இன்னும் ஒரு மாத காலம் தருகின்றேன். அன்றைய தினம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும். இல்லையேல் அவர்களுக்குப் பிணை அளிக்கப்படும்' என்றேன்.

அடுத்த தவணை வழக்கு அழைக் கப்பட்ட போது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. மதிய உணவின் பின்னர் குறித்த வழக்கில் எனது தீர்மா னம் தரப்படும் என்று கூறி உரிய நேரத் தில் மதிய போசனத்திற்கு நீதிமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. மதிய உணவு இடைவேளையின் போது சிரேஷ்ட சட்டத்தரணியும் அப்போதிருந்த நீதி அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகம் அவர்களின் சகோதரருமான திரு. நவரட்ணராஜா அவர்கள் 10,12 சட்டத்தரணிகளுடன் என்னை வந்து என் தனியறையில் சந்தித்தார்.



'சேர்! இன்று மாவை சேனாதிராஜா வழக்கில் உங்கள் தீர்மானத்தைத் தர இருக்கின்றீர்கள். நீங்கள் ஒரு இளம் நீதிபதி. முதன் முதலாக இங்கு மட்டக் களப்புக்கே நீங்கள் நியமிக்கப்பட்டுள் ளீர்கள். வந்து சில மாதங்களே ஆகின் றன. மாவை சேனாதிராஜா, காசி ஆனந் தன் போன்றவர்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க நினைக்கும் பயங்கரவாதப் பேர் வழிகள். அவர்களுக்கு தயவு, தாட்சண்யம் காட்டக் கூடாது. உங்கள் வருங்கால நீதிபதி வாழ்க்கை நல்லாய் இருக்க வேண்டும் என்று தான் உங்க ளுக்கு அன்புடன் எங்கள் இந்தக் கருத் தைக் கூற வந்துள்ளோம். எந்த வகை யிலும் அவர்களுக்கு பிணை அளிக் கப்படக் கூடாது. அளித்தால் விளைவுகள் நன்றாக இருக்கா' என்றார்.

நான் உடனே எழுந்து அவர்கள் ஒவ்வொருவருடனும் கை குலுக்கி 'நீங்கள் யாவரும் எனது வருங்காலத்தை உத்தேசித்து எனக்கு அறிவுரை வழங் கியதற்கு எனது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி! நன்றி!' என்று கூறிவிட்டு வழியனுப்பினேன்.

மதிய இடைவேளைக்குப் பின் மன்று கூடிய போது அரச சட்டத்தரணியிடம் 'குற்றப் பத்திரிகை இன்று தாக்கல் செய்கின்றீர்களா?' என்று கேட்டேன். 'இல்லை' என்றார்.

'நான் சென்ற தடவையே கூறியி ருந்தேன். இன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாவிட்டால் பிணை அளிப்பதாகக் கூறியிருந்தேன். நீங்கள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வில்லை. ஆகவே சந்தேக நபர்கள் ஒவ்வொருவருக்கும் பிணை அளிக்கின் றேன். அரசானது குற்றப்பத்திரிகை பதிய ஆயத்தமானதும் சந்தேக நபர்களை மன்றுக்கு அழைக்கலாம்' என்று கூறி பிணை விவரங்களை மன்றுக்குத் தெரியப்படுத்தினேன்.

குறித்த குற்றப் பத்திரிகை என்றுமே அதன் பின்னர் தாக்கல் செய்யப்பட வில்லை. காரணம், கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுகள் போலியானவை. ஐந்து வருடங்கள் மட்டக்களப்பில் தரித்து நிற்க வேண்டிய நான் ஓரிரு வாரங்களில் சாவகச்சேரிக்கு வேண்டுமென்றே மாற்றப்பட்டேன்.

அதன் பின்னர் பல இடங்களில் மாவையைச் சந்தித்துள்ளேன். என் றுமே அவர் என்னுடன் அன்புடனேயே பேசுவார். அவர் வெறும் தமிழ் இனவாதி அல்லாமல் தமிழ்த் தேசியத்தின் தூ ணாகவே எனக்குப் புலப்பட்டார். அரசியலுக்கு வந்த பின்னர் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எப்பொழுதுமம் ஒரு சகோதர வாஞ்சையுடனேயே அவர் என்னுடன் பழகினார். எந்தக் காரணத்தினாலும் எமக்குள் மனக் கசப்பு ஏற்பட்டதில்லை.

அவருக்குப் பதிலாக என்னைத் திரு.சம்பந்தன் அவர்கள் வடமாகாண முதலமைச்சராக வர கட்சிக்கு அறி முகப்படுத்தியதால் மாவை சற்று மன வருத்தப்பட்டார். அவரின் நிலை பற்றி அறிந்த பின் எனக்கும் மனவருத் தந்தான். தனது 16 அல்லது 17வது வயதில் அரசியலுக்குள் காலடி எடுத்து வைத்தவர் மாவை. கட்சிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் விஸ்வாசமாக நடந்து கொண்டவர். பல போராட் டங்களில் பங்கெடுத்துக் கொண்டவர். நல்ல பேச்சாளர். அவர் முதலமைச்சராக வர ஆசைப்பட்டதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் சூழல் என்னை முதலமைச்சர் ஆக்கியது.

ஒரு கட்சி அன்பர் என்னிடம் 'ஐயா! நீங்கள் மாவையின் இடத்தைப் பறித்து விட்டீர்களே!' என்றார்.

'தயவு செய்து இது பற்றி என்னுடன் பேசாதீர்கள். திரு.சம்பந்தனிடம் இது பற்றிக் கேளுங்கள்' என்றேன். 'நான் ஆறு மாதங்களுக்கு மேலாக அரசியல் எனக்கு வேண்டாம் என்று தவிர்த்துக் கொண்டு வந்திருந்தேன். திரு.சம் பந்தன், திரு.ஆனந்தசங்கரி, திரு.ஸ்ரீதரன், திரு.சித்தார்த்தன், திரு. பிரேமசந்திரன், திரு.செல்வம் அடைக் கலநாதன், திரு.சுமந்திரன், திரு. மனோகணேசன் போன்ற பலர் என் இல்லம் தேடி வந்து வற்புறுத்திய தாலேயே நான் தேர்தலில் நிற்க ஒப்புக் கொண்டேன். மாவைக்கு முதலமைச் சராக வர ஆசை இருந்தது என்பது பற்றி உண்மையில் எனக்கொன்றும் அப்போது தெரியாது. திரு.சம்பந்தன் அவர்கள் தன் உறவினரான திரு. வித்தியாதரனையே முதலமைச்சராக்க நினைத்திருந்தார் என்றுதான் எனக்குக் கூறப்பட்டது.

எனினும் குறித்த அன்பர் சம்பந்த னிடம் போய் 'ஏன் மாவையைத் தவிர்த்து விக்னேஸ்வரனை முதலமைச்சர் ஆக்கினார்கள்?' என்று கேட்டிருக் கின்றார். நான் அறிந்த வரையில் திரு. சம்பந்தன் அவர்கள் பின்வருமாறு அவருக்குப் பதில் அளித்திருந்தார்:-

' நாம் யாவரும் சமமானவர்களே என்று நாங்கள் தவறாக நினைக் கின்றோம். சட்டத்தின் முன் நாம் யாவரும் சமமே. ஆனால் அதன் அர்த் தம் சட்டம் யாவருக்கும் சம உரிமைக ளைக் கொடுக்கின்றது. அதற்காக யாவரும் சமம் என்று கொள்ள முடியாது. ஒரு வைத்தியரும் ஒரு கமக்காரனும் சட்டத்தின் முன் சமமே என்பதால் வைத்தியரை விவசாயம் செய்யச் சொல்லியோ, கமக்காரரை மருத்துவம்

தொடர்ச்சி▼

# மாவை சேனாதிராஜா....

தொடர்ச்சி▲

செய்யச் சொல்லியோ கேட்க முடியாது; கேட்கக் கூடாது. மாவை ஒரு பேரணியின் முன்னின்று அதனை வழிநடத்திச் செல்லக்கூடியவர். கட்சிக்கு விஸ்வாசமானவர். ஆனால் முதலமைச்சர் பதவிக்கென்று பல கடமைகள் உண்டு. அவற்றைச் செய்யக் கூடியவர் இவர் என்று தான் நாங்கள் திரு.விக்னேஸ்வரனை அழைத்திருந்தோம்' என்று கூறியதாகக் கேள்வி.

இதன் காரணத்தால் எனக்கும் மாவைக்கும் இடையில் போட்டி பொறாமை என்று பத்திரிகைகள் கூறத் தலைப்பட்டிருந்தாலும் சகல விதங்களிலும் மாவை என்னுடன் மிகவும் அன்புடனும் பண்புடனுந்தான் நடந்து கொண்டார். என்னைப் பொறுத்த வரையில், நான் அறிந்த வகையில் மாவை சமரசத்தையும் சமாதானத்தையுமே விரும்பினார். எமது கட்சியின் தேசியப் பெருவிழாவிற்கு சென்ற ஆண்டு அழைத்த போது அவர் பார்வையாளர்களில் ஒருவராக வந்து முன் வரிசையில் இருந்து நிகழ்ச்சிகளை கடைசி வரையில் இருந்து கேட்டு இரசித்துச் சென்றார். எல்லா விதங்களிலும் எனக்கு உறுதுணையாகவே அவர் இருந்தார். அவரின் பிரிவு மனதில் ஒரு ஏக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. பழம் பெரும் தமிழ் அரசியல்வாதி ஒருவரை இழந்து நிற்கின்றோம்.

ஒரு நல்ல நண்பரை நான் இழந்துள்ளேன்! மாவையின் ஆத்மா இறைவனடி சேர்வதாக! – என்று உள்ளது.



# பிற்போடப்பட்ட வடமத்திய மாகாண தவணைப் பரீட்சை இன்று ஆரம்பம்

பரீட்சை வினாத்தாள் வெளியாகியமை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட வடமத்திய மாகாண சாதாரண தரப் பரீட்சையை இன்று முதல் 16 ஆம் திகதி வரை மீண்டும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பௌத்தம் மற்றும் தமிழ் மொழி தவிர அனைத்து பாடங்களும் இன்று முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறும் என்று வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் சமன் குமார தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் வடமத்திய மாகாணத்தில் உள்ள கோட்டக் கல்வி அலுவலகங்களில் வைக்கப்பட்டு, பரீட்சை நாளன்று சம்பந்தப்பட்ட அதிபர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்விச் செயலாளர் சமன் குமார தெரிவித்துள்ளார்.



# கோழி இறைச்சியின் விலையில் வீழ்ச்சி

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, முட்டையின் விலை 24 – 30 வரையிலும், ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 650 – 850 வரையிலும் விற்பனை செய்யப்படுவதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முட்டை மற்றும் கோழி உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், அதன் தேவை குறைந்ததாலும் விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறப்பு அங்காடிகளில் 10 முட்டைகள் கொண்ட ஒரு பொதி 500 – 520 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் கூறியுள்ளனர்.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.






# இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள மாணவர் இலவச காலணி திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான காலணிகளை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களை விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 05 ஆம் திகதியுடன் நிறைவடையுமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

250 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கே காலணிகளை கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலைகளின் மாணவர்களுக்காக வவுச்சர்களை விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக அப்பியாச கொப்பிகளையும் கற்றல் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்காக 6000 ரூபா கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கையையும் எதிர்வரும் 05 ஆம் திகதியுடன் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக சுமார் 5 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.







## மேன்முறையீட்டு நீதிமன்றின் பதில் தலைவர் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றின் பதில் தலைவராக நீதிமன்றத்தில் தற்போதிருக்கும் சிரேஷ்ட நீதியரசரான மொஹமட் லபார் தாஹிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் பதில் தலைவராக மொஹமட் லபார் தாஹிர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் பந்துல கருணாரத்ன, ஓய்வுபெறுவதற்கு முந்திய விடுமுறையைப் பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், அதனை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் ஒருவர் அரசமைப்பு ரீதியாக நியமிக்கப்படும் வரை இந்த நியமனம் நடைமுறையில் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மஹபொல புலமைப்பரிசில் 3 மாதங்களாக கிடைக்கவில்லை

## அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றிய தெரிவிப்பு




03 மாதங்களாக மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு கிடைக்கவில்லையென அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவிக்கின்றனர்.

சில பல்கலைகழங்களில் 3 மாதங்களுக்கு மேல் மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் மதுஷான் சந்தரஜித் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாக குறிப்பிட்டார்.

சுமார் ஒரு வருடகாலமாக கொடுப்பனவில் தாமதம் ஏற்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போது இந்த தாமதத்தை 3 மாதங்களாக குறைத்துள்ளதாக உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவந்து வழமைபோன்று மாதாந்தம் மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் உறுதியளித்தார்.



# சுகயீனத்தால் உயிரிழந்த வெளிநாட்டு பிரஜை

கொள்ளுப்பிட்டி விடுதியொன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜையொருவர் திடீர் சுகயீனத்தால் உயிரிழந்துள்ளார்.

24 வயதான பிரித்தானிய பிரஜையொருவரே உயிரிழந் துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

திடீரென ஏற்பட்ட நோய்நிலைமையால் பிரித்தானிய பிரஜை தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# முதல் தடவையாக கூடும் கோப் குழு




கோப் குழு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் தடவையாக கூடவுள்ளது.

முதல் நாளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதானிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தெரிவித்துள்ளார் .

எதிர்வரும் 20 ஆம் திகதி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத் தல் அதிகார சபையினருக்கு அழைப்ப விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

கோப் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி இதுவரை எவரும் பெயரிடப்படவில்லை.



# நாட்டில் சிக்கன்குன்யா நோயாளர்கள் அதிகரிப்பு

நாட்டில் சிக்கன்குன்யா நோயாளர்கள் பதிவாகும் வீதம் கடந்த சில வாரங்களில் அதிகரித்துள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களில் பதிவான மழையுடனான வானிலையி னால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில் சிக்கன்குன்யா நோய்ப் பரவல் உயர்வடைந்துள்ளதாக சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நுளம்பு பெருக்கம் அதிகம் காணப்படும் பகுதிகளில் அவதா னமாக செயற்படுமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண் டுள்ளார்.




# குஜராத்தில் சொகுசு பஸ் விபத்து: ஐவர் உயிரிழப்பு, 17 பேர் காயம்

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் சொகுசு பஸ் விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் ஆன்மீக தலங்களுக்கு சுமார் 48 யாத்தரீகர்களுடன் பயணித்திருந்த பஸ் ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

டாங் மாவட்டத்தின் மலைப்பகுதியில் அந்த பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்தில் இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஐவர் உயிரிழந்துள்ளனர். 17 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஏனையவர்கள் சிறுகாயமடைந்துள்ள நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ள நிலையில், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# இந்திய வரவு செலவு திட்டத்தில் இலங்கைக்கான ஒதுக்கீடு அதிகரிப்பு

இந்தியாவின் வரவு செலவு திட்டத்தில் இலங்கைக்காக 300 கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசாங்கத்தால் நேற்று முன்தினம் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் நிர்மலா சீதாராமன் இந்த வரவு செலவு திட்டத்தை முன்வைத்தார். அவர் தாக்கல் செய்த 08 ஆவது வரவு செலவு திட்டம் இதுவாகும். இதில் இந்திய வெளியுறவு அமைச்சுக்காக 20,516 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக 5,483 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.



அண்டை நாடுகளில் நீர் மின் நிலையங்கள், வீட்டு வசதி, வீதிகள், பாலங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் போன்ற பாரிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கைக்கு இந்தியாவின் வரவு செலவு திட்டத்தின் ஊடாக 300 கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது இலங்கை ரூபாயில் சுமார் 1032 கோடியாகும்.

இலங்கை, பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்திய வரவு செலவு திட்டத்தில் வெளிநாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளில் பூடான் நாட்டுக்கே அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்நாட்டுக்காக 2025-26 ஆம் ஆண்டுக்காக 2,150 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நடுத்தர மக்களுக்கு உதவும் மத்திய வரவு செலவு திட்டம்

## நடிகை ராதிகா வரவேற்பு

மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை நடுத்தர மக்களுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளது என நடிகை ராதிகா தெரிவித்தார்.

பா.ஜ.க. சார்பில் கோவை வெள்ளலூர் புறவழிச்சாலையில் மூன்றாவது ஆண்டாக மோடி ரேக்ளா போட்டி நேற்று நடந்தது. குறிப்பிட்ட நேரத்தில் பந்தய தூரத்தை அடைந்த மாட்டு வண்டி வீரர்கள் மற்றும் மாடுகளுக்கு இருசக்கர வாகனம், கோப்பை ஆகிய பரிசுகளை நடிகை ராதிகா வழங்கினார். முன்னதாக நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அவரை மாட்டு வண்டியில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்கள் அழைத்து வந்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் நடிகை ராதிகா சரத்குமார் கருத்து தெரிவிக்கையில்,

"பாரம்பரியமான ரேக்ளா போட்டியை நடத்துவது நல்ல முயற்சியாகும். தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு மைதானம் இருப்பது போல ரேக்ளா போட்டிக்கும் மைதானம் அமைக்க வேண்டும். உழவன் மகன் படத்தில் நடிக்கும் போது இந்த ரேக்ளா போட்டி போன்ற ஒரு காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இது போன்ற போட்டிகளை மக்கள் ரசித்து பார்வையிடுவதுடன், மிகுந்த வரவேற்பு அளிக்கின்றனர்.

பிரதமர் மோடிக்கு தமிழகத்தின் மீது அன்பும் மரியாதையும் உண்டு. எனவே ரேக்ளா போட்டிக்கு மைதானம் அமைக்க அவரின் கவனத்திற்கு கொண்டு



சென்றால் கோரிக்கை நிச்சயம் நிறைவேறும். சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் பெண்களுக்கு எதிராக நடந்த சம்பவம் மிகவும் வருந்தத்தக்கது. தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய வரவு செலவு திட்டம் நடுத்தர மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. பெரியார் தொடர்பான சர்ச்சை செய்திகளை நானும் பார்த்தேன். எது சரி, தவறு என்பது மக்களுக்கு தெரியும். தமிழக வெற்றி கழகம் இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நிலையில் விஜய்க்கு வாழ்த்துக்கள்." என்றார்.

# கொங்கோ மோதலில் 700 பேர் உயிரிழப்பு

## ஐ. நா. சபை தகவல்





கிழக்கு கொங்கோ ஜனநாயக குடியரசின் மிகப் பெரிய நகரமான கோமாவில் நடந்த கடுமையான மோதல் சம்பவத்தில் குறைந்தது 700 பேர் கொல்லப்பட்டனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 2,800 பேர் காயமடைந்துள்ளனர்.

ருவண்டாவின் ஆதரவுடன் செயலபடும் எம்.23 என அழைக்கப்படும் போராளிக்குழு வட கிவு மாகாணத்தின் தலைநகரை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்ரீபன் டூஜாரிக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், தற்போது அவர்கள் தெற்கு கிவுவின் தலைநகரான புக்காவு நோக்கி முன்னேறுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு முதல் கிழக்கு கொங்கோ குடியரசில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும், அண்மைக்காலத்தில் பாரிய முறையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டுட்சி இனத்தைச் சேர்ந்த எம்.23 போராளிகள் குழு, சிறுபான்மையினரின் உரிமைக்காகப் போராடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ருவண்டா ஆதரவுடன் செயல்படும் இந்த போராளிக்குழுவினர், கிழக்கு பிராந்தியத்தில் பரந்த அளவில் உள்ள கனிம வளத்தைக் கட்டுப்படுத்த முயல்வதாகக் கொங்கோ ஜனநாயக குடியரசு அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அதேவேளை, தாக்குதல்கள் நடக்கும் பிராந்தியத்தில் உணவு, சுத்தமான குடிநீர் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் கவலை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, இந்த வருடத்தின் ஒரு மாத காலப்பகுதியில் மட்டும் 4 லட்சம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஏதிலிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.





# உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா திட்டம்

உக்ரைன் – ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கான திட்டத்தில் தான் பணியாற்றி வருவதாக அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது, உக்ரைன் – ரஷ்யா போரை ஒரே நாளில் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என ஜனாதிபதி ட்ரம்ப் கூறியி ருந்தார்.

அத்தோடு, உக்ரைனில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்த அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்ட உக்ரைன் தயாராக இருந்தால், இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தல் நடத்தப்படலாம் என அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜேர்மனின் முன்னாள் ஜனாதிபதி ஹோர்ஸ்ட் கோஹ்லர் காலமானார்

ஜேர்மனின் முன்னாள் ஜனாதிபதியும் சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் பிரதானியுமான ஹோர்ஸ்ட் கோஹ்லர் தமது 81 ஆவது வயதில் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார்.

பொருளாதார நிபுணரான ஹோர்ஸ்ட் கோஹ்லர் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளராகப் பதவி வகித்திருந்தார்.

அதன் பின்னர் அரசியலுக்குப் பிரவேசித்து ஜேர்மனியின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

2004 ஆம் ஆண்டு முதல் ஜேர்மனியின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஹோர்ஸ்ட் கோஹ்லர் 2010 ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார்.

2010 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், அவர் தமது பதவியிலிருந்து விலகியிருந்தார்.



# இன்றைய ராசி பலன்கள் - 03.02.2025




இன்றைய நாள் சுமூகமாகச் செல்லும். நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கையுடன் இருப்பார்கள். இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

பணியிடத்தில் உங்களுக்கு இனிமையான ஆச்சரியங்கள் காத்திருக்கும். நீங்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளை எளிதாக சமாளிக்கலாம். உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். கிடைக்கும் பணத்தை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின முயற்சி மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

உங்கள் உறுதி மற்றும் நேர்மை காரணமாக உங்கள் பணிக்கு நல்ல பெயர் கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களை கலந்து ஆலோசிப்பீர்கள்.

கடன்கள் மூலம் சில பண வரவு காணப்படும். இதன் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்று பொதுவாக மகிழ்ச்சி காணப்படும். நீங்கள் இன்றைய நாளை புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள பயன்படுத்தலாம். பொது நிகழ்ச்சிகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். உங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமையை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பங்கு வர்த்தகத்தால் லாபமும் பயனும் அடைவீர்கள்.

ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. சில சூழ்நிலைகள் உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும். மகிழ்ச்சியாக இருக்க முயலவும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

இன்று உங்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. எனவே எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் தேவைகளுக்கு கடன் கூட வாங்குவீர்கள். சளி சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிப்பு காணப்படும்.




நீங்கள் அறிவுபூர்வமாக செயலாற்றுவதன் மூலம் இன்று எழும் பிரச்சினைகளைக் கையாள இயலும்.இ ன்றைய நாள் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிகமாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.




இன்று சிறப்பாக நாளாக அமையும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். சகஜமான அணுகுமுறை மூலம் எளிதாக இலக்கை அடையலாம்.

உங்கள் பணியில் சிறந்த வெற்றி பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். எந்த விஷயத்தையும் புது முறையில் ஆற்றுவீர்கள்.நீங்கள் உங்கள் துணையிடம் மகிழ்ச்சியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.கனிசமான பண வரவின் காரணமாக இன்று மறக்க முடியாத நாளாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் சேமிப்பதன் மூலம் பணம் சம பாதிக்கலாம்.




நம்பிக்கையும் மன உறுதியும் இன்று மிகவும் அவசியம். தைரியமின்மையால் பிரச்சினைகள் உருவாகும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவனமுடம் பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் காணப்படும். இது கோபமாக வெளிப்படும். இதனை உங்கள் துணையிடம் வார்த்தையில் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிப்படையும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் உங்கள் பணச் சுமை அதிகரிக்கும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படும். உடற்பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் அளிக்கும். புத்திசாலித்தனமாக யோசிப்பது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் வளர்ச்சி காண உகந்த நாள் அல்ல. குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கும் உங்கள் திறமைகளைக் குறைக்கும் வகையில் சில தடைகள் ஏற்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மிகுந்த உணர்சி வசப்படுவீர்கள்.சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. ஆன்மீக நோக்கத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

அதிக நீரைப் பருகி உங்களை ஆரோக்கியமாக வைத்திருங்கள். இதனால் வயிற்று உப்பசம் சீராகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.02.2025




எந்த ஒரு செயலையும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்துச் செயல்பட வேண்டும் உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் குழப்பம் வேண்டாம். பிரார்த்தனை மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பது அரிது. பணியை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிடல் அவசியம்.

மனக் குழப்பம் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். காரணமேயில்லாமல் உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் செய்ய நேரும்.

இன்று பண விரயம் காணப்படும்.செலவுகளை கட்டுபடுத்த முடியாது. கவனமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பல் வலி காணப்படும். கண்களுக்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் உங்கள் மனதில் ஓடும். இது அனைவரிடத்திலும் காணப்படும். முக்கியமான செயல்கள் செய்வதற்கு இன்று ஏற்ற நாள்.

பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணிகளை சுமூகமாகக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். திருப்திகரமான நிலை காணப்படும். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும்.




இன்று சற்று மந்தமான நிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

இன்று புதிய பணி வாய்ப்புகள் உங்களுக்கு அதிக திருப்தியை அளிக்கும். சாதித்த உணர்வு ஏற்படும்.

உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க இது ஏற்ற நாள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். ஊக்கத்தொகை வகையில் இன்று பண வரவைக் காணலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




வாக்குவாதங்கள் ஏற்படும் என்பதால் உரையாடுவதற்கு முன் கவனம் தேவை. சகஜமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை துல்லியமாகவும் தரத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்துங்கள். சளி, முதுகுவலி போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




# தொழில் வெற்றிடங்கள் காணப்படுவதாக வட்செப் ஊடாக போலித் தகவல் பரவல்

## தேர்தல் ஆணைக்குழு தகவல்

தேர்தல் ஆணைக்குழுவில் தொழில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என வட்செப் ஊடாக போலித் தகவல்கள் பகிரப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு தொழில் வாய்ப்பை வழங்குதல், வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிப்புகள் விடுக்கப்படவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். ஏ. எம். எல் ரத்நாயக்கதெரிவித்துள்ளார்.

போலி தகவல் தொடர்பில் ஆராய்வதற்காக பொலிஸ் கணினி குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவில் தொழில் வெற்றிடங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டு பரப்படும் லிங்குகளுக்குள் பிரவேசிக்கவோ, அவற்றை பகிரவோ வேண்டாமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.